Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . . AGRICULTURIST

A Monthly Journal devoted to Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1 புத்தகம். 1	சௌமிய௵ மாசி௴ 1௳ 1910௵ பிப்ரவரி௴ 12௳	Part. 11 பிரதி. 11

Contents

Some Improvements in Paddy cultivation 161
The Plantain 166
Foot and Mouth Disease ... 167
Some thoughts on Agricultural and Industrial Exhibitions and cattle shows. 168
Dew Ponds 171
Maize 173
A Method of Collecting Farmyard Manure ... 173
The Month's operations ... 175
News and Notes 175

பொருளடக்கம்

நெல்சாகுபடியில் சில சீர்திருத்தங்கள் ... 161
வாழை ... 166
கால்நோய வாயநோய் ... 167
விவசாயக் கைத்தொழில் பொருட் காக்ஷிகளைப்பற்றியும் கால்நடைக்காக்ஷிகளைப்பற்றியும் சில குறிப்புகள் ... 168
பனிக்குட்டங்கள் ... 171
மக்காச்சோளம் ... 173
தொழு எருச் சேர்க்கும் விதம் ... 173
மாசிமாதத்திய பருவங்கள் 175
குறிப்புகள் ... 175

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12

Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by
J. R. RANGA RAJU,
5, Mount Road, Madras

[*All Rights reserved*]

தயாராகிவிட்டது!காப்பிக்குமுந்துங்கள்!!

தாமதிக்காதீர்கள்

சந்திரகாந்தா

ஓர் இனிய துப்பு அறியும் தமிழ் நாவல்.

இதைப்போலொத்த சிறந்த நாவல் இதுவரையில் பிரசுரிக்கப் படவில்லை யென்பது இதைவாசித்த எல்லோருடைய அபிப்பிராயம். கண்டோர்மனதைக்கவரும் மூன்று சித்திரப்படங்களுடன் கூடியது. இந்த நாவலானது "இராஜாம்பாள்" எழுதிய ஜே. ஆர். ரங்கராஜா அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 12.

தபால்கூலி வி. பி. கமிஷன் அணா 3 பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி உடனே வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 1 / புத்தகம் 1 — சௌமிய௵ மாசி௴ 1௳ / 1910௵ பிப்ரவரி௴ 12௳ — No. 11 / பிரதி 11

நெல் சாகுபடியில் சில சீர்திருத்தங்கள்

SOME IMPROVEMENTS IN PADDY CULTIVATION

நெல் சாகுபடியானது சாதாரணமாக இரண்டுவகைப் பாய்ச்சலாதாரங்களின் ஆயக்கட்டில் செய்யப்படுகின்றது. ஆற்றுக்கால்களிலிருந்து தண்ணீர் வரத்துள்ள குளங்களும், மானாவாரிக் குளங்களும், சிலவிடங்களில் ஆற்றுக்கால்களிலுள்ள மடைகளிலிருந்து நேர்பாய்ச்சலுள்ள நிலங்களுமுண்டு. இவைகளைத் தவிர கிணற்றிறவையால் நெல் சாகுபடியாகும் நிலங்களுமுண்டு. இவைகளில் மானாவாரிக் குளங்களின் ஆயக்கட்டுகள் அநேகமாய் ஏகபோகப் பட்டாதார்களுக்குச் சொந்தமாயிருக்கும். அல்லது இரண்டு அல்லது மூன்று பெரிய பட்டாதார்களைச் சேர்ந்ததாயிருக்கும். இப்படி ஏகபோகதார்களுக்காவது பெரிய பட்டாதார்களுக்காவது ஒரு குளத்தின் ஆயக்கட்டு சொந்தமாயிருந்தால் அக்குளத்தின் பாசனமடைகள் திறப்பதும் அடைப்பதும் கிரமமாய் நடத்தப்பட்டு வரும். அந்த நிலங்களில் சரியான காலங்களில் குளத்தில் பெருகியிருக்கும் தண்ணீருக்குத் தக்கதான விஸ்தீரணத்தைப் பயிரிடுவார்கள். நாற்று விடவேண்டிய காலந் தவறாமல் நாற்று விட்டும், விதைக்கவேண்டியதாயிருந்தால் காலந் தவறாமல் விதைப்பு நடத்தியும், மற்றப் பருவங்களையும் காலந் தவறாமலும் ஒழுங்காயும் நடத்தி வருவார்கள். கால்வரத்துக் குளங்களின் ஆயக்கட்டும், கால்புரவு நிலங்களும் அநேக பட்டாதார்களுக்குச் சொந்தமாயிருக்கும். அவைகளில்

ஆகும் பருவங்கள் ஒழுங்கீனமாய் நடக்கும். அக்குளங்களின் பாசனமடைகள் அடைப்பும் திறப்பும் ஒழுங்கீனமாய் நடக்கும். மற்ற நிலங்களெல்லாம் விதைப்புக்குப் பருவம் செய்துகொண்டிருக்கும்போது ஒருவன் ஒரு மூலேயில் நாற்றுப்பாவுகிறதற்கு மடையைத்திறந்து தண்ணீர் கொண்டுபோவான். தன் நாற்றங்காலில் தண்ணீர் பாய்ச்சியபின் அந்த நாற்றங்காலின் வாய்மடையை அடைத்துக் காலில்வரும் தண்ணீரை அந்தக் கால் வழியே போக விட்டுவிடுவான். தான் திறந்த குளத்தின்மடையைத் தான்போய் அடைக்கவேண்டியது தன்கடமை யென்பது அவன் மூளேயில் படுவதில்லை. இப்படிக் குளத்தின் தண்ணீர் ஒருவருக்கும் உபயோகப்படாமல் கால்வழியாய் ஒருநாள் இரண்டுநாட்களுக்கு ஓடிக் கழிவானபின் யாராவது பெரிய குடித்தனக்காரர் ஒருவர் அதைக் கவனித்து அதிக மனஸ்தாபப்பட்டுத் தன் வேலையாட்களை யனுப்பிக் குளத்தின் மடையை அடைக்கும்படி செய்வார். அப்படிச் செய்யும்வரை குளத்தின் தண்ணீர் வீணுய்ப்போகும். இது ஒரு பெருங்கேடு. இதன்றிப் பொடிவிதைக்குப் பருவம் செய்யப்பட்டிருக்கும் வயல்களினருகே போகும் கால்கள் வழியாய்த்தண்ணீர் பாய்வதால் காய்ந்துவரும் நிலங்களில் தண்ணீர் ஊற்றுண்டாகி விதைப்புக்கு லாயக்கில்லாமல்போகும். இப்படித் தண்ணீர் கொண்டுபோவதைத் தடுக்கப் பொதுவாய் மற்றக் குடிகளுக்கு யாதொரு சாதனமுமில்லை. பருவக்கேடு உண்டாவதற்கு விசனித்து தண்ணீர்கொண்டு போனவனை அவனில்லாத தருணத்தில் வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டுச் சும்மாயிருப்பார்கள்.

இது போகக் குளத்தின் ஆயக்கட்டு முழுவதுக்கும் தண்ணீர் காணுமலிருக்கும் தருணத்தில் நிலத்தை மட்டுக்கட்டி சாகுபடி செய்யவேண்டியது அவசியம். ஏகபோகப் பட்டாதார்களுக்குச் சொந்தமானல் அப்படியே மட்டுக்கட்டி சாகுபடி செய்வார்கள். சில்லரைப் புள்ளிகளுக்குப் பாத்தியப்பட்ட ஆயக்கட்டுகளில் இவ்வித கட்டுப்பாடு நடப்பதில்லை. கிராமப் பெரிய தனக்காரர் கர்ணம் ரெவினியூ இன்ஸ்பெக்டர் முதலான உத்தியோகஸ்தர் சேர்ந்து பிரயாசைப்பட்டாலுங்கூட கட்டுப்பாட்டில் அனேகர் அடங்காமல் தாறுமாருய்ப் பருவம் செய்வார்கள். சில மடைகள் மேட்டு மடைகளாயிருக்கும். குளத்தில் தண்ணீர் கால் குளத்துக்குக் குறைவானல் சில மடைகளில் தண்ணீர் ஏருது. பள்ளத்து மடைகளில் எப்போதும் தண்ணீர் பாயும். அப்படியிருக்குமிடங்களில் பள்ளத்து மடைகளடியிலிருக்கும் நிலங்களையே தண்ணீர் தட்டுக் காலங்களில் சாகுபடி செய்யவேண்டியது கிரமம். அதைவிட்டு எல்லா மடைகளிலும் தண்ணீரைத் திறந்து பாய்ச்சிச் சாகுபடிசெய்து தண்ணீர் குறைந்தவுடனே எல்லா நிலங்களும் முன்னும் பின்னுமாய்த் தீவாகும். இருபோக நிலங்களும் ஒருபோக நிலங்களும் கலந்திருக்கும் சில

ஆயக்கட்டுகளுண்டு. முதல் போகம் அறுவடையான பின் இரண்டாம் போகச் சாகுபடிக்குக் கொஞ்சம் தண்ணீரிருக்குமாகில் இரு பூநிலங்கள்தான் சாகுபடி செய்யவேண்டியது கிரமமாகும். அப்படியிருக்க ஒருபோக நிலங்களையுடைய சிலர் அடாதுடியாய்த் தங்கள் நிலங்களையும் சாகுபடி செய்வார்கள். இப்படியவர்கள் செய்வதைப் பற்றித் தாசில்தாருக்கு முன் கூட்டியே தெரிவித்தாலுங்கூட அவர் செய்வதெல்லாம் நிலங்களால் தீவுண்டானால் வஜா கொடுக்கப்பட மாட்டாது என்று ஒருபோக நிலக்காரருக்கு நோட்டீசு கொடுப்பது தான். அவர்களைத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளாமல் தடுப்பதில்லை. சில இடங்களில் ஒருபோக நிலங்கள் மடைக்குச் சமீபமாயும், இருபோக நிலங்கள் சற்றுத் தூரத்திலுமிருக்கும். இப்படியிருந்தால் மடைக்குச் சமீபமாயிருக்கும் ஒருபோக நிலம் விளைவாகவும் சற்றுத் தூரத்திலிருக்கும் இருபோக நிலம் தீவடையவும் நேரிடுகிறது. இப்படியானால் ஒரு சமயம் இருபோக நிலத்திலுண்டான தீவுக்கும் வஜாவில்லாமல் போகும். இவ்விதமாய் இருபோக நிலக்காரருக்கு இரண்டு விதத்தில் நஷ்டமுண்டாகக் கூடியதாயிருக்கிறது. இதெல்லாம் கிராமத்திலுள்ள கிருஷிகருக்குள்ள ஒற்றுமைக் குறைவினால் நேரிடும் காரியங்கள்.

இனி வயல் நிலங்களைப் பயிர்செய்யும் வேலையாட்களின் மதியீனத்தால் நேரிடும் சில கெடுதிகளைப் பற்றி யோசிப்போம். வயல்கள் நடுகைசெய்து தேறிக் கருநடுகைப்பட்டவுடனே, அவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதில் இவ்வேலையாட்கள் தக்க கவனம் செலுத்துவதேயில்லை. அனேக ஊர்களில் பள்ளர் தங்கள் கையில் மண்வெட்டிகளைச் சுமந்து போவதுகூட அனுவசியமாக எண்ணி, வயல்களுக்குப்போய் வாய்மடையைக் காலினால் மிதித்துக் கால்வழியாய்ப் பாய்ந்துகொண்டிருக்கும் தண்ணீரை வயலுக்குள் திருப்பிவிட்டு வீட்டுக்குப்போய் விடுவார்கள். அரைமணி நேரத்தில் வயலில் தண்ணீர் சரியாய்ப் பாய்ந்துவிடும். ஒருமணி நேரம் பாய்ந்தால் வரப்புகள் முழுகிப்போகும். அதற்கதிகம் பாயும் தண்ணீர் வரப்புகள் மேல் வழிந்து அடுத்த வயலில் விழுந்து இப்படியே அந்தக்கண்ணூரிலுள்ள வயல்களையெல்லாம் வெள்ளக்காடாக்கிவிடும். இப்படி ஒருவயலிலுள்ள தண்ணீர் மற்றொன்றில் பாய்ந்து வெளியாவதினாலுண்டாகும் கெடுதிகளின்னதென்று இந்தப்பள்ளருக்குத் தெரியுமானால் அவர்கள் இப்படி நடப்பதை முழுதும் நிறுத்தியே விடுவார்கள். அவர்களுக்கு எடுத்தெடுத்துச் சொன்னாலும் அவர்கள் மனதில் பதியாது. ஒரு வயலில் எருவிட்டுத் தழைமிதிப்பது அந்தப்பயிருக்கு அவ்வெரு உபயோகமாகும்படியல்லவா? போட்ட எருமண்ணில் சேர்ந்து பயிருக்கு உபயோகமாக வேண்டியதாயிருக்க, அவ்வயலில் பாய்ந்து வெளியோடும் தண்ணீரில் கரைந்து கழிந்துபோனால் பயிருக்கு எப்படியுபயோகமாகும்? இதில் வருஷாவருஷம் வயல்களுக்குண்டாகும்

எரு நஷ்டம் எத்தனையோ லக்ஷரூபாய் பெறுமானது. இப்படியிருந்தும் ஒரு குடியானவனாவது இந்தப்பெரிய நஷ்டத்தைக் குறித்து விசனித்து அந்த நஷ்டம் ஏற்படாதிருக்க வழிதேடுகிறதில்லை.

ஒரு வயலில் அதிகலாபம் அடையக்கூடும் என்று எண்ணி அதிகஎருவை அதில் கொட்டுகிறார்கள். இப்போது வரவர எருவின் கிரயம் அதிகமாயிருக்கிறது. அப்படியிருக்க தண்ணீரில் கரைந்து கழியும் எருவின் நஷ்டத்தைக் கவனிக்காதிருப்பது சரியல்ல. இறுபூநிலங்களுக்குக் காரில் எருவிடுவார்கள். பிசானத்தில் தழைமிதிப்பார்கள். ஆட்டுக்கிடைமறிப்பதும், சாம்பல், தொழு எரு முதலிய எருவிடுவது முக்கியமாய்க்கார்பயிரில்தான். இதற்குக்காரணமென்னவென்றால் காரில் அதிகமழை பெய்வதில்லை. எப்போதாவது ஒன்றிரண்டு மழைகள் பெய்யலாம். ஆனால் பிசானத்திலோ தொடர்ந்து அடைமழைபெய்து வெள்ளக்காடாகும். இப்படி வெள்ளம் உண்டாகும்போது வயல்களில் போடப்பட்டிருக்கும் உரம் கழிந்துபோய் நஷ்டமுண்டாகு மென்பதால் தான் பிசானத்தில் அதிகமாய் நிலங்களுக்கு எருவிடுவதில்லை. இது வழக்கமாய் நடக்குங் காரியமானதால் நமது கிருஷிகர் அதைக் கைக்கொண்டு நடத்தி வருகின்றனர். நாம் சிலவகை எருக்களைப் பிசானத்தில் வயல்களுக்குப் போடலாமென்று போதித்தாலுங்கூட நமது கிருஷிகர் நம்பமாட்டார்கள். அப்படியிருந்தும் இவ்விஷயம் மட்டும் அவர்களுக்குத் தெரிவதில்லை.

நன்செய் பயிர் செய்பவர்களை இப்படி ஏன் செய்கிறீர்களென்று கேட்டால் அதுதான் வழக்கமென்று சொல்லுவதுமன்றி "மேல் வயல் தண்ணீர் கீழ் வயலுக்குள் வடியாமல் எங்கே போகும்?" என்று கேட்பார்கள். வடியவேண்டுமானால் வாய்மடையைத் திறந்து வடிகாலில் வடியவிடக்கூடாதா? இது வீண் சாக்குப்போக்கேயொழிய வேறல்ல. குளத்தின் மடைகளை வேண்டும்போது திறந்து வயல்களுக்கு வேண்டிய அளவு தண்ணீரைப் பாய்ச்சிக்கொண்டு, மடைகளை அடைத்துவிட்டால் இப்படித் தண்ணீர் வயல்மேல் வயலாய்க் கழிக்கவேண்டியதிராது. இதனால் விளையும் பெருத்த நஷ்டத்தை எல்லாரும் கவனித்து நிவர்த்திசெய்ய முயலவேண்டும்.

கிராமங்களில் கிருஷிகரின் சபையொன்றேற்படுத்தி அதில் கிருஷிகருக்கு வேண்டிய விஷயங்களையெல்லாம் பேசி முடிவு செய்து, தண்ணீர் அவம்போக்காதிருப்பதற்கு வேண்டிய முயற்சிகளைத் தேடலாம். தண்ணீர் பாய்ச்சலை மேற்பார்ப்பதற்கும், மடைகளை அடைக்கவும், திறக்கவும், தண்ணீர்த் தட்டுக் காலங்களில் வயல்களில் பாடு கண்டு தண்ணீர் பாய்ச்சவும், இந்த வேலைகளில்லாத காலத்தில் குளத்தின் மராமத்து முதலான பொது வேலைகளை மேல் பார்

க்கவும் ஒரு சிப்பந்தியைக் குறைந்த சம்பளத்தில் நியமித்து வேலை வாங்கிவந்தால் இந்தக் காரியம் சரியாய் நடந்துவரும். நிலங்களிலிருந்து வரும் மாசூலில் ஏக்கர் ஒன்றுக்கு வருஷத்துக்குச் சுமார் 4 பக்கா நெல்வீதம் வசூல் செய்தால், சுமார் 300 ஏக்கர் உள்ள ஆயக்கட்டிலிருந்து வருஷத்துக்கு 1200 பக்கா நெல் சேரும். இதன் விலை சுமார் ரூ 100-ஆகும். இது சிப்பந்தி சம்பளத்துக்கும் நெல் வசூல் செய்யச் செல்லும் செலவுக்கும் போதுமானது. இப்படிக் கிராமக் கட்டுப்பாட்டுடன் ஒரு நீராணிக்கனும் நியமிக்கப் படுவானென்றால், தண்ணீர் மட்டாயும் ஒழுங்காயும் பாசனமாகும்.

ஜீவர்களுக்கு இரத்தம் எவ்வளவு முக்கியமானதோ, அப்படியே கிருஷிகருக்குத் தண்ணீர் வெகு முக்கியம். கிணற்றிறவை செய்து நெல் சாகுபடிசெய்து வருகிறவர்களுக்கும், மானவாரிக் குளத்தாருக்கும் தண்ணீரின் அருமை நன்றாய்த்தெரியும். கால் பாசனமுடையவர்களுக்கும் கால்வாத்துக் குளங்களின் பாசனமுடையவர்களுக்கும் தண்ணீரின் அருமை தெரியாது. ஆனால் தண்ணீரை மட்டுக்கட்டிப் பாய்ச்சாமல் பயிர்கள் பட்டுக் கெடுதியடையும் போதுமட்டும் அவர்களுக்குத் தண்ணீரின் அருமைதெரியும். என்றாலும் தண்ணீரை மட்டுக்கட்டிப் பாய்ச்சியிருந்தால் தீவுசம்பவித்திராதென்றும், இனியப்படி தண்ணீர்க்குறைவு நேரிடுங் காலத்தில் மட்டுக்கட்டிப் பாய்ச்சவேண்டியதா யிருக்குமென்றும் அவர்கள் மனதில் திட்டமாய்ப் படுவதில்லை. நாம்சொல்லும் விதமாய்க் கிருஷிகருடைய சபைகளைக் கிராமங்தோறும் ஏற்படுத்தி இதைப்பற்றிப் பேசித் தீர்மானத்துக்கு வந்தால் அதன்பின் அவர்கள் இதன் உண்மையை உணர்ந்து நீராணிக்கன் மூலமாய்த் தண்ணீர் பாய்ச்சலை ஒழுங்கு படுத்துவார்கள்.

தண்ணீர்க் குறைவாகுங் காலங்களில்மட்டும் தான் இது செய்ய வேண்டுமென்று நாம் சொல்லவில்லை. தண்ணீர் ஏராளமாயிருக்கும் போதுகூட பயிர்களுக்கு வேண்டிய அளவு தண்ணீரைமட்டும் மடைகளில் விட்டுவரவேண்டும். அதனால் பயிர்கள் அறுவடையானபின் கொஞ்சம் தண்ணீர் குளத்தில் மீதமாகும். இரண்டாம் போகமாவது, கால்நடைத்தீனிக்கு நாற்றுச் சோளமாவது, தழை எருப் பயிர்களாவது இவைகளில ஏதாவது ஒன்று விதைத்து வளர்க்க அந்த மீதத்தண்ணீர் போதுமானதாயிருக்கும். கால்பாசன நிலங்களா யிருக்கும்பக்ஷத்தில் மேல் பாசனத்தில் மீதமாகும் தண்ணீர் கீழ்ப்பாசனத்துக்கு வெகு உபயோகமாயிருக்கும். இந்தக் கீழ்ப்பாசனக்காரருக்குத்தான் அடிக்கடித் தண்ணீர்த்தட்டு நேரிடுகிறது. ஆகையால நன்செய் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும் காரியத்தில் குடிகள் அதிக கவனத்தைச் செலுத்துவார்களென நம்புகிறோம்.

வாழை

THE PLANTAIN

இப்போது வெவ்வேறு தேசங்களில் அநேக பேர்களுடனும் உருவத்திலும் வர்ணத்திலும் அளவிலும் பேதப்பட்டு இருக்கும் வாழைத் தினுசுகளெல்லாம் ஆதியில் ஒரேவிதமாய்த்தான் இருந்திருக்குமென்று நம்பவேண்டியிருக்கிறது. ஏனென்றால் ஓரிடத்திலிருக்கும் ஓர்வித வாழையை மற்றோரிடத்தில் கொண்டுபோய் வைத்தால் அந்த இடத்தின் நீர்வள நிலவள சீதோஷ்ண பேதங்களுக்கேற்றபடி அளவில் சற்றுக் கூடியாவது அல்லது குறைந்தாவது குலை போடுவதுடன் வர்ணமும் சில சமயங்களில் பேதப்படுகிறது. இத்துடன் ருசியும் மாறுதலடைகிறது. திருஷ்டாந்தமாக மதுரை ஜில்லாவிலுள்ள சிறுமலைப் பழச்செடிகளைக் கொண்டுவந்து வெளிகளில் வைத்தவுடனே சிறுமலையில் வளரும் பழங்களைவிட வெளிகளில் திரட்சியாய் வளருகிறது. ஆனால் சமவெளியில் வைத்த பழங்கள் சிறு மலையிலுண்டாகும் பழங்களைப்போல் அவ்வளவு ருசியாயிருப்பதில்லை. சென்னப்பட்டணத்தைச் சேர்ந்த சைதாப்பேட்டைக்கடுத்த "ஜெகந்நாதபாக்" என்னும் நமது சோதனைத் தோட்டத்தில் இப்போது 32 வாழைத்தினுசுகள் நமது இராஜதானியிலுள்ள பல ஊர்களிலிருந்து வரவழைத்து வைத்திருக்கிறோம். பத்திரிகையின் மூலமாய்ப் படிப்பதைவிட நேரில் பார்ப்பது அதிக அனுகூலத்தைத் தருமாகையால் அநேக தினுசு வாழைகளை ஒரே இடத்தில் பார்க்க விரும்புகிறவர்கள் நமது தோட்டத்தில் வந்து பார்க்கலாம். மேலும் இப்போது நமது தோட்டத்தில் ஓர் அபூர்வமாகிய செவ்வாழைக்குலை போட்டிருக்கிறது. அதில் ஒரு சீப்பு பூராவும் செவ்வாழையாகவும் இன்னொரு சீப்பு பூராவும் பச்சையாகவும், இரண்டு சீப்புகளில் பாதிகாய்கள் சிவப்பாகவும், பாதிகாய்கள் பச்சையாகவும், இன்னும் இரண்டு காய்கள் ஒவ்வொன்றும் பாதி பக்கம் பச்சையாகவும் மற்றப்பாதி பக்கம் சிவப்பாகவும் இருக்கின்றன. இதை இந்தப் பிப்ரவரிமீ 25௳ சென்னை தேனாம்பேட்டை அக்ரி ஆர்டிகல்சரல் சொசைடி தோட்டத்தில் நடத்தும் புஷ்பக்காக்ஷிக்கு அனுப்பப்போகிறபடியால் அதைப்பார்க்க விரும்புகிறவர்கள் காக்ஷிசாலையிலாவது அல்லது அதற்கு முன்னால் நமது தோட்டத்திலாவது வந்து பார்க்கவேண்டும்.

சாதாரணமாக வாழைகளைப் பின்னால் சொல்லியிருக்கும் ஐந்து பிரிவுகளாய்ப் பிரிக்கலாம்.

(*a*) வாழைப்பழங்களுக்காகவே வளர்க்கும் தினுசுகளாகவும்,

(*b*) பதார்த்தம் சமைப்பதற்காகக் காய்களாகவே உபயோகப்படுத்தும் தினுசுகளாகவும்,

(*c*) இலைகளுக்காக மாத்திரம் உதவும் தினுசுகளாகவும்,

(*d*) தண்ணீரில்லாத பாலைவனங்களில் தாகத் தண்ணீராக உதவும் தினுசுகளாகவும்,

(*e*) அந்தஸ்து அல்லது அலங்காரத்திற்காக மட்டும் உதவும் தினுசுகளாகவும் பிரிக்கலாம். (இன்னும் வரும்).

கால்நோய் வாய்நோய்

FOOT AND MOUTH DISEASE

அனேக கிருஷிகர் இந்த வியாதியைச் சிலசமயங்களில் வெக்கை நோயென்று நினைக்கிறார்கள். ஏனென்றால் இவ்விரு வியாதிகளிலும் உண்டாகும் சில குணங் குறிகள் ஒன்றுபோலிருக்கின்றன. என்றாலும் வெக்கை நோய்க்கும் இந்த வியாதிக்குமிருக்கும் வித்தியாசம் எளிதில் கண்டறியலாம். இவ்வியாதியிலுண்டாகும் கால்புண் வெக்கையில் ஒருக்காலு முண்டாவதில்லை. வெக்கையிலுண்டாகும் மலக்கழிச்சலும் சீதபேதியும் இவ்வியாதியி லுண்டாவதேயில்லை. இந்த வித்தியாசத்தைக் கால் நடைக்குடையவர்கள் வெகு ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். ஏனென்றால் அந்தந்த வியாதிக்குத் தக்கதான சிகிச்சை அகற்குச் செய்யவேண்டியதாயிருக்கும்.

நாம் முன் தெரிவித்தபடி இவ்வியாதியிலும் நாம் முக்கியமாய்ச் செய்யவேண்டியது என்னவென்றால் வியாதி கண்ட கால்நடைகளைச் சரியாய்ப் போஷித்து ஜாக்கிரதையாய்ப் பாதுகாப்பதுதான். இப்படிச் செய்தால் கால் நடைகளுக்கு இவ்வியாதியிலுண்டாகும் காய்ச்சல் மூன்றுதினங்களில் சொஸ்தமாகும்.

கால்நடைகளின் காலிலும் வாயிலுமுண்டாயிருக்கும் கொப்புளங்கள் பத்துப் பதினைந்து தினங்களில் மாறிக் குணப்படும். அவைகள் அதிகமாய் மெலிவடையாமலுங் காக்கக்கூடும். முக்கியமாக இந்த வியாதியுண்டான வுடனேயே கால்நடைகளை வேலைசெய்யாமல் வீட்டில் நிறுத்திவைக்கவேண்டும். இல்லாவிட்டால் வேலைசெய்வதாலுண்டாகும் உஷ்ணத்தினால் காலிலும் வாயிலுமுள்ள புண் அதிகப்பட்டு எளிதில் சொஸ்தமாகாமல் நெடுநாள் வியாதியுடனிருந்து மெலிந்து சில சமயங்களில் கால்நடைகள் மாண்டுபோகவும் ஏதுவாயிருக்கும். ஆகையால் இவ்வியாதியுண்டானவுடன் கால்நடைகளை வெயிலில் கட்டிவைக்காமல் சுத்தமான தொழுக்களில் கட்டிவைக்கவேண்டும். தொழுவில் குளிர்ந்த காற்று நன்றாய் வீசக்கூடியதாயிருக்கும் இடத்தில் அவைகளைக் கட்டவேண்டும். இதில் கிருஷிகர் அஜாக்கிரதையா யிருக்கக்கூடாது. அரைப்படி வெந்நீரில் அரையணா எடையுள்ள படிக்காரத்தையாவது வெண்காரத்தையாவது கரைத்து, அது ஆறினவுடன் அந்தத் தண்ணீரை வியாதிப்பட்ட கால்நடைகளின் வாயில்விட்டுக் கழுவவேண்டும்.

அத்திமரத்தில் தளிர் இலையைக் கொண்டுவந்து, இரண்டு பலம்

இலையை இடித்து அதனுடன் ஒரு பலம் பனை வெல்லத்தையும் சேர்த்து இடித்து உண்டைசெய்து உள்ளுக்குக் கொடுக்கலாம். அல்லது கனிந்த வாழைப் பழமாக 25 பழங்களை உரித்து கால்படி நல்லெண்ணெயில் பிசைந்து உள்ளுக்குக் கொடுக்கலாம். ஆவாரம் இலையைக் கொண்டுவந்து தண்ணீரில் போட்டு வேகவைத்து வெந்த இலையை அந்தக் கஷாயத்திலேயே அரைத்து வாயிலும் கால் குழம்புகளின் இடுக்கிலுமுள்ள புண்ணுறும்படியாய்த் தடவிவைக்கலாம். கொஞ்சம் கீல் எண்ணெயும் மண் எண்ணெயும் கலந்து காலிலுள்ள புண்ணுக்குத் தடவலாம். கொஞ்சம் தேங்காய் எண்ணெயில் கொஞ்சங் கற்பூரத்தைக் கலந்து தடவினால் மிகவும் நன்மையாயிருக்கும். அல்லது சீமைச் சுண்ணாம்புப்பொடி, கரித்தூள், படிக்காரத்தூள், மயில் துத்தப்பொடி இவைகளைக் கலந்து காலிலுள்ள புண்ணின்மேல் அடிக்கடிக் கொஞ்சம் தூவினால் அதிசீக்கிரத்தில் குணமாகும். மறுநாள் காலையில் மறுபடியும் வெந்நீர்கொண்டு கால்களையும் வாயையும் பால்மடியையும் வெந்நீரினால் கழுவி துடைத்துவிட்டு மறுபடியும் மேற்சொன்ன மருந்துகளில் ஒன்றை உபயோகிக்க வேண்டும். உடம்பில் சூடு அதிகமாயிருந்தால் வியாதிப்பட்ட கால் நடைகள் குடிக்கும் தண்ணீரில் கொஞ்சம் வெடியுப்பைப் போட்டு வைத்தால், அந்த உஷ்ணம் சாந்தமடையும்.

இப்படி மருந்து உபயோகிப்பதுடன் இவ்வியாதியுண்டான கால் நடைகளுக்கு இளம்புல்லை ஆகாரமாகக் கொடுக்கலாம். அரிசிக்கஞ்சியில் உப்பும் பனைவெல்லமும் போட்டுக் கரைத்தும் வைக்கலாம்.

இப்படிச் செய்தால் இவ்வியாதியால் பீடிக்கப்பட்ட கால் நடைகளில் ஒன்றுகூட சாகாமல் காக்கக்கூடும்.

விவசாயக் கைத்தொழில் பொருட்காட்சிகளைப் பற்றியும் கால்நடைக் காட்சிகளைப் பற்றியும் சில குறிப்புகள்

SOME THOUGHTS ON AGRICULTURAL AND INDUSTRIAL EXHIBITIONS AND CATTLE SHOWS

(தொடர்ச்சி)

விவசாயக் கைத்தொழிற் காக்ஷிகள் நடத்துவது முக்கியமாய் விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பிரயோஜன முண்டாகும்பொருட்டு செய்யப்படுவதாதலால், இந்தக் காக்ஷிகளை விவசாயத்திலும் கைத்தொழில்களிலும் வாஸ்தவத்தில் சம்பந்த முடையவர்களில் அநேகம்பேர்கள் வந்து பார்க்கவேண்டியதற்குத் தகுந்த ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்திருக்கவேண்டும். இவ்விஷயத்தில் செலவாகும் பணம் அதிகமாதலால், அதற்குத் தக்கபடி இவ்வகுப்பு ஜனங்கள் அக்காக்ஷியால் கொஞ்சமாவது பலனடையவேண்டும். அக்காக்ஷிகளைக் கூலியாட்களும் பெண்களும் பிள்ளைகளும் திருநாள் வேடிக்கைபோல் பார்த்துச்சென்றால், அந்தப் பொருட்செலவு, வானவேடிக்கைபோல் புகைந்து போவதன்றி வாஸ்தவத்தில் ஒருபலனையும் தராது ஒழிகிறது. ஆகையால் ஒரு காக்ஷியை நடத்த உத்தேசிக்கும் ஒரு ஜமீன்தாரோ

அல்லது ஒரு விவசாய சங்கத்தாரோ, அல்லது மற்ற கனவான்களோ யாராலும் முன்கூட்டியே இதைப்பற்றி முக்கிய சிரத்தையெடுத்து கலெக்டர் மூலமாகவும், மற்றசொல் சக்தியுள்ள உத்தியோகஸ்தர் மூலமாயும் எல்லாத் தாலூகாத் தாசில்தார்களும், ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் முறை முறையே இக்காக்ஷிக்குவந்து பார்க்கவேண்டுமென்றும், அப்படிவரும் ஒவ்வொரு ரிவினியூ இன்ஸ்பெக்டரும் தன் பிற்காவிலுள்ள முக்கியமான கிருஷிகரில் 20, 25-பேர்களையாவது தவறாமல் கூட்டிக்கொண்டு வரவேண்டுமென்றும், அப்படிச் செய்யவேண்டியது அந்த உத்தியோகஸ்தருடைய கடமையென்றும், அப்படிச் செய்யாதவர்களைப் பற்றிக் கலெக்டர் துரை தகுந்த விசாரணை செய்து அவர்களைச் சிக்ஷிக்கவேண்டுமென்றும், ஏற்பாடுசெய்து முன் கூட்டியேவேண்டும் உத்திரவுகளை கிராம சவுக்கர்களுக்கும் அனுப்பியிருந்தால், காக்ஷிகளுக்கு விவசாய சம்பந்தமும் அறிவும், நூதனவிஷயங்களை அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவலுமுடையவர்களாய் அனேகமாயிரம் ஜனங்கள் வருவார்கள். தற்காலத்தில் கெஜட்டுகளிலும் பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்வதினால் இவ்விஷயம் எல்லா ஜனங்களுக்கும் முன் கூட்டியே தெரிகிறதென்றும் அதனால் அவர்களிலனேகர் காக்ஷிகளுக்கு வரக்கூடுமென்றும் அனேகர் சொல்லலாம். உலக ஞானம் உண்மையிலில்லாதவர்களே இப்படிப் பேசுவார்கள். வாஸ்தவமாக கிருஷிகரில் எத்தனை பேருக்கு எழுத வாசிக்கத் தெரியும்? அப்படித் தெரிந்த எத்தனைபேர் பத்திரிகைகளை வாசிக்கிறார்கள். பட்டணங்களிலன்றிக் கிராமாந்திரங்களிலுள்ளவர்கள் என்ன பத்திரிகைகளை வருத்தி வாசிக்கின்றனர்? இதையெல்லாம் யோசித்துப்பார்த்தால் நாம் இங்கு சொல்வது வாஸ்தவமென்று நன்றாய்த் தெரியவரும். இன்ன இடத்தில் பொருட்காக்ஷி நடக்கிறதென்று சில கிருஷிகருக்குத் தெரிந்திருக்கிறதென்று வைத்துக்கொண்டாலும், அவர்களில் கொஞ்சம் பேர்தான் காக்ஷியைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவலுடன் போவார்களேயன்றி, மற்றவர்கள் "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?" "நெய்கிறவனுக்கு எதுக்குக் குரங்குக்குட்டி?" என்று சொல்லிக்கொண்டு தங்களுக்கு அங்கே ஜோலி யொன்றுமில்லை யென்றும், தாங்கள் காக்ஷி சாலைக்குச் சென்றால் அது வீண்காலப் போக்கென்றும், அப்படிச் செலவாகும் காலத்தில் வேறு உபயோகமான காரியங்களைத் தங்கள் வீட்டிலும்விளைகளிலும் செய்துகொண்டிருக்கலாமென்றும் சொல்லி நகட்டிவிடுவார்கள். இதனாலேயே பொருட்காக்ஷிகளில் வந்து கூடும் ஜனங்கள் திருநாள் பார்க்கும் காட்டாட்களாகவே யிருப்பது. ரெவினியூ உத்தியோகஸ்தர் மூலமாய் தண்டோராப் போடுவித்து, சரியான கிருஷிகரைத் திரட்டிக் கூட்டிக்கொண்டு வரும்படிக்கான ஏற்பாடுகள் செய்தால், தவறாமல் ஆயிரக்கணக்காய் கிருஷிகர் வருவார்கள் என்பதில் தடையே யில்லை. அவர்களுக்கென்றே ஆயிரக் கணக்காய்ப் பணச்செலவு செய்து இக்காக்ஷிகளை நடத்தும்போது அவர்கள் காக்ஷிக்குப் போகவில்லை யென்றால் என்ன பிரயோஜனம்?

இப்படிக் கவர்ன்மெண்டார் தங்கள்உத்தியோகஸ்தரைஇவ்விஷயத்தில் உழைக்க இடங்கொடுப்பார்களோ, என்ற சந்தேகம் அனேகருக்குண்டாகலாம். இக்காக்ஷிகளை நடத்தும் கனவான்கள் ஆயிரக்கணக்காய் பணச்செலவு செய்வது கிருஷிகரும் தொழிலாளிகளும் விருத்தி யடையவேண்டும் என்னும் முக்கிய நோக்கத்துடனல்லவா? இவர்கள் க்ஷேமப்பட்டால் அது கவர்ன்மெண்டாருக்கு அனுகூலமல்லவா? "குடியுயரக் கோனுயர்வான்" என்னும் பழமொழி நிஜமல்லவா? அது நமது கவர்ன்மெண்டார்

மறந்து போகவில்லையென்பது அவர்களிக்காக்ஷிகள் விஷயத்தில் எடுத்துக் கொள்ளும் சிரத்தையே காட்டுகிறது. ஆகையால் இவ்விஷயத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளும் பக்ஷத்தில், தப்பாமல் கலெக்டர்கள் மூலமாய் வேண்டும் ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நாம் நம்புகிறோம்.

இப்பொருட்காக்ஷிகளில் இன்னொரு விஷயம் சரியாய் நடக்கவில்லை. அதாவது காக்ஷி காலத்தில் விவசாயக் கருவிகளை வேலைசெய்து காட்டுவதில்லை. பொருட்காக்ஷிக்காக அனுப்பப்படும் நோட்டீசுகளில் மட்டும் இதைப் பற்றி விசேஷமாய்ப் பிரசுரஞ் செய்யப்படுகிறது. காக்ஷி முடிந்தவுடனும் விவசாயக் கருவிகளை இன்னின்னார் வேலைசெய்து ஜனங்களுக்குக் காட்டினார்கள் என்று வெகு விமரிசையாய்ப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்துவிடுகிறார்கள். ஆனால் வாஸ்தவத்தில் அங்கு நடப்பதோ நகைப்புக்கிடமாகும். எப்படியெனில், கலப்பை அல்லது விதைக்கருவியின் உபயோகத்தை ஜனங்களுக்கு இனன தேதியில் இன்ன சமயத்தில் காட்டப்படும் என்று பிரசுரம் செய்வதுமட்டும் சரியாய் நடக்கிறது. அக்கருவிகளும், அவைகளின் வேலையை நடத்திக்காட்ட ஏற்பாடு செய்திருக்கும் உத்தியோகஸ்தரும் தங்கள் வேலையாட்களுடனும் கால்நடைகளுடனும் குறிப்பிட்டகாலத்தில் தயாராய் வந்திருக்கிறார்கள். நிலம் உழுவதற்கு ஈரப்பதமிருக்க வேண்டுமல்லவா? பதமில்லையானால் நிலமுழுவது எப்படி? இதுமுக்கியமென்று காக்ஷியை நடத்தும் கனவான்களுக்குத் தெரியாதா? எந்தக்காக்ஷியிலாவது ஒரு நிலத்தைக் குறிப்பிட்டு முன்கூட்டியே அந்த நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சி நனைத்து வைத்திருந்ததை நாய் பார்க்கவுமில்லை; கேள்விப்படவுமில்லை. பதமில்லாத நிலத்தில் கருவிகளைக்கொண்டு வேலை செய்யவேண்டியதாய் நேரிடுகிறது. அதில் அக்கருவிகளின் விசேஷ உபயோகம் எப்படி வெளியாகும்? அதைக் காணும் ஜனங்களுக்கு அக்கருவிகளைப் பற்றி நல்ல அபிப்பிராயம் எப்படியுண்டாகும்?

சிலவிடங்களில் கருவிகளின் உபயோகங்களை ஜனங்களுக்குக் காட்டிக் கொண்டிருக்தம்போது அவ்விடத்தில் வாஸ்தவமான விவசாயிகளைத்தவிர அனேக காட்டுஜனக்கூட்டங்களை அங்கு வரவிடுத்து, அவர்கள் பக்கங்களில் ஒதுங்கி நிற்கக்கூடிய ஏற்பாடுகளில்லாததால் கருவிகளின் வேலை நடத்தப்படுமிடத்திலேயே அவர்கள் நெருங்கி, கால்நடைகள் கலைந்தோடும்படியாயும், வேலை சரியாய் நடக்காமல் போகவும் நேரிடுகிறது. இப்படி நடக்காமல் வேலை நடக்குமிடத்தைச் சுற்றிக்கயிறுகள் கட்டி ஜனங்கள் நெருங்காமல் தடை செய்து வைக்கவேண்டும். இதுவுமன்றிச் சிலசமயங்களில் அனேக கருவிகளை ஒன்றாய் வேலைசெய்ய விடுத்து, அவைகளில் எது நன்றாய் வேலை செய்கிறதென்று தீர்மானித்து அவைகளுக்குப் பரிசுகொடுப்பதென முன்கூட்டி விளம்பரப்படுத்துகிறார்கள். அதற்குத் தக்கபடி அனேக கருவிகள் கொண்டுவரப்படுகின்றன. ஒன்று பெரிய காட்டுக்கலப்பை. அதற்கு ரூபா 300-பெறுமான ஒருஜதை மாடுகள் பூட்டப்பட்டிருக்கின்றன. இன்னொன்று சீமை இரும்புக் கலப்பை. அதற்கு ஜதையொன்றுக்குச் சுமார் ரூபா 250-பெறுமான கால்நடைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. மற்றொன்று இன்னாட்டில்செய்த நாட்டுக் கலப்பைபோன்ற இரும்புக்கலப்பை. அதற்கு ரூபா 60-பெறுமான ஜதைக் கால்நடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளை ஒன்றாய்விட்டு வேலைசெய்து கண்பார்வையில் எது எப்படி வேலை செய்ததென்று நிதானித்து அவைகளுக்குப் பரிசு கொடுக்கப்படுகிறது. இதில் என்ன நியாயமிருக்கிறது. ரூபா 60-பெறுமான ஒருஜதைக் கால்நடைகளுக்கும், ரூபா 300-பெறுமான ஜதைக் கால்நடைகளுக்கும் வித்தியாசமில்

லையா? முன்சொன்னதைவிடப் பின்சொன்ன கால்நடைகள் அதிக வேலை செய்யாதா? இந்தப் பரிக்ஷையில் என்ன பிரயோஜனம்? ஏறக்குறைய ஒரேதரமான கால்நடைகளைப் பூட்டி வேலை நடத்தினால், அக்கருவிகளின் தாரதம்யம் நன்றாய் வெளியாகும். இதைப்பற்றி இனிமேல் நடத்தும் காக்ஷிகளில் தக்க ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறோம்.

இந்தக் காரியத்தில் நாம் கவனித்த மற்றொரு ஒழுங்கீனம் என்னவெனில் காலையில் பரீக்ஷை 7-மணிக்கு நடத்தப்படுமென்று ஏற்பாடு செய்திருக்க அக்காரியத்தை மேற்பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் $7\frac{1}{2}$-மணிக்குமேல் அங்கு வருகிறார்கள். அப்போது கலப்பை கட்டுவதற்கு வடக்கயிறு இல்லையென்று ஒருவன் ஓடுகிறான். மாடுகளின் தலைக்கயிறு நீளம் போதாதென்று வேறு கயிறு வாங்கிக்கொண்டு வர ஒருவன் ஓடுகிறான். தாற்றுக்கோல் அல்லது சவுக்கு இல்லையென்று ஒருவன் ஓடுகிறான். இவர்களெல்லாம் தங்கள் காரியங்களைத் தொடங்க 8-மணிக்குமேலாகிறது. உஷ்ண காலத்தின் காலை வெயிலோ அதி தீக்ஷண்யமாய்க் காய்கிறது. இந்த வேலையைப் பற்றித் தீர்மானம் செய்து பரிசளிக்க ஏற்பாடு செய்திருக்கும் ஐரோப்பிய உத்தியோகஸ்தரோ திட்டமாய் 7-மணிக்கு வந்து 9-மணிவரையும் காத்திருந்தும், வேலை ஒன்றும் சரியாய் நடக்காமலும், காட்டுக்கூட்டங்களை விலக்க ஆட்களில்லாமலும், அவ்விஷயத்தில் காக்ஷியுத்தியோகஸ்தரிலொருவரும் சிரத்தையெடுக்காமலிருப்பதையும் கவனித்து சரி சரியென்று தங்களுக்குத் தோன்றிய மட்டும் யாருக்காவது ஒருவருக்குப் பரிசளித்துப்போகின்றனர். இதையும் நிவர்த்திக்க வேண்டியதவசியம்.

சில காக்ஷிகளில் விவசாயக் கருவிகளின் உபயோகத்தை ஜனங்களுக்கு நடத்திக் காட்டவேண்டும் என்பதே அவசியமாகத் தோற்றவில்லைபோலும். கருவிகளை மட்டும் கொண்டுவந்து வைத்து, ஜனங்கள் அவைகளைப் பார்த்துவிட்டு அவைகளின் உபயோகத்தைப் பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ளாமல் தங்கள் ஊருக்குத் திரும்பிப் போவதில் என்ன லாபம்? கிருஷியின் அபிவிருத்திக்கு இது ஒரு முக்கியமான விஷயம். ஆகையால் இனிமேல் நடத்தும், ஒவ்வொரு காக்ஷியிலும் இவ்விஷயத்தைக் கவனித்து வேண்டும் ஏற்பாடுகள் சரியாய்ச் செய்வார்களென்று நம்புகிறோம். (இன்னும் வரும்).

பனிக்குட்டங்கள்

DEW PONDS

ஒரு தேசத்தில் மழையில்லாமல் பூமி எவ்வளவாய்க் காய்ந்து வறண்டிருந்தபோதிலும் அதன்மேலுள்ள ஆகாயத்தில் நீராவியில்லாமல் போகாது. இதற்கு உதாரணமாக இரவில் திறந்த வெளியாயிருக்குமிடத்தில் பள்ளிப் பிள்ளைகள் எழுதும் பலகையையாவது ஒரு கண்ணாடிச் சில்லையாவதுபோட்டுவைத்தால் மறுநாட்காலையில் அதிக நீர்த்துளிகள் இருக்கக்காணலாம். காலை வேளையில் புல்தரைகளின்மீது நடக்கும்போது புல்லின் நுனியில் முத்து முத்தாய் நீர்த்துளிகள் ஒட்டிக்கொண்டிருப்பதையும் காணலாம். வாழைகளின் இலைகளிலிருந்து அதிகாலையில் சொட்டுச்சொட்டென்று நீர்த்துளிகள் விழுவதும் இந்தக் காரணத்தினால்தான். ஆகாயத்திலிருக்கும் நீராவியானது குளிர்ச்சியான பதார்த்தங்களாகிய எழுது பலகை, கண்ணாடி, புல், இலை முதலியவைகளிற் பட்டவுடன் அந்த ஆவியானது தண்ணீராய் மாறிவிடுகிறது. இப்படி ஆகாயத்தில் கலந்திருக்கும் அளவிறந்த நீராவியைக் கீழே கொண்டுவந்து உபயோகப்படுத்திக் கொள்வதற்கு ஒரு உபாயம் உண்டென்

றும், ஆதிகாலந் தொடங்கியே தண்ணீரில்லாப்பாலைநிலங்களில் வசிக்கும் ஜனங்கள் இவ்வுபாயத்தினால் தாகந்தணிப்பதற்குவேண்டிய தண்ணீரை உண்டுபண்ணிக் கொண்டார்களென்றும் டாக்டர் ஹப்பர்ட் சொல்லுகிறார்.

இந்த உபாயம் என்னவெனில் தண்ணீர் அகப்படாத ஓரிடத்தில் பெரிதான குட்டம் ஒன்றைத்தோண்டி அதின்மேல் பரப்பில் காய்ந்த வைக்கோலைத் தளமாய்ச் சிதறி, அதன்மேல் களிச்சாந்து கரைத்துப் பூசி அதன்மேல் கொஞ்சங்கூழாங்கற்களைப் பரப்பி வைக்கிறார்கள். இப்படிச் செய்வதால் அந்தக்குட்டத்தில் கொஞ்சக்காலத்துக்குள் தண்ணீர் கட்டிக்கொள்ளுகிறதாம். குட்டம் எவ்வளவு பெரிதாயிருக்கிறதோ அதற்குத் தக்கதாக அதிகமான தண்ணீர் அதில் கட்ட ஏதுவுண்டாகிறதாம்.

இது எப்படியுண்டாகிறதென்று சற்றுக்கவனிப்போம். பகலில் காயும் வெயிலால் நிலத்திலுள்ள அற்பசொற்ப ஈரமெல்லாம் காய்ந்து ஆவியாகி ஆகாயத்தில் கலந்து நிற்கிறது. ஆகாயமானது அதிக உஷ்ணமாயிருக்கும்போது அதில் அதிகமான நீராவி தங்கியிருக்கக்கூடும். அதின் உஷ்ணங் குறையும்போது அதில் அவ்வளவு அதிகமான நீராவி கலந்திருக்கமுடியாது. ஆகையால் ஆகாயத்தில் கலந்திருக்கக்கூடிய நீராவியின் அளவு அதின் சீதோஷ்ணத்துக்குத் தக்கதாயிருக்கும். பகலில் வெயில் காய்வதனால் நிலமும் ஆகாயமும் உஷ்ணமடைந்து நிலத்தில் அதிக ஆழத்திலுள்ள ஈரமுங்கூட நீராவியாகி ஆகாயத்தில் கலந்திருக்கும். சூரியன் அஸ்தமித்ததுமுதல் நிலம் கொஞ்சங்கொஞ்சமாய் குளிர்ந்துகொண்டே வரும். பின்மாலையில் பூமியின் மேற்பரப்பிலுள்ள குளிர்ந்த வஸ்துக்களின்மேல் ஆகாயம் பட்டவுடனே அதிலுள்ள நீராவி ஜலரூபத்தையடைந்து பனியாகி அவ்வஸ்துக்களில் படியும். இந்தக் காரணத்தினால் குட்டத்தின் மேற்பரப்பில் விரித்திருக்கும் வைக்கோலின்மேல் பூசிய களிச்சாந்து பின்மாலையில் மிகவுங் குளிர்ந்திருக்குமாகையால் அதின்மேல் அதிகமான பனிபடிந்து குட்டத்தில் இறங்கும். பூமியின் மேற்பரப்புக்கும் இந்தக் களிச்சாந்துக்கும் இடையே வைக்கோல் பரப்பியிருப்பதால் அந்த வைக்கோலானது பூமியில் தங்கியிருக்கும் உஷ்ணம் களிச்சாந்தில் ஏறாமல் தடுக்கிறது. ஆகையால் பூமிமட்டம் குளிர்ச்சியடையுமுன்னமே, களிச்சாந்து மிகவும் குளிர்ந்து விடுகிறது. இதனால் வெகு சீக்கிரத்தில் அதன்மேல் பனிபடிய ஏதுவுண்டாகிறது. மேகம் மூடியிருக்குமாகில் பூமியின் மேல் பரப்பிலிருந்து உஷ்ணம் வெளிப்பட்டுப் போவதைத் தடுத்துத் தாமதப்படுத்தும். ஆகையால் அது அவ்வளவு சீக்கிரத்தில் குளிர்ச்சியடைவதில்லை. அப்படி மேகமந்தாரமில்லாமல் நக்ஷத்திரங்கள் பிரகாசமாய்த் தெரியும் இரவில் பனி அதிகமாய்ப் படியும். இவ்விதத்தில் கொஞ்சகாலத்துக்குள் குட்டத்தில் நீர் நிரம்பிவிடும் என்று டாக்டர் ஹப்பர்ட் எழுதியிருக்கிறார்.

இத்தேசத்தில் இவ்விதமாகக் குடி தண்ணீர் சம்பாதிக்கவேண்டிய அவசியமில்லையானாலும் மழை பெய்யாத அனேக விடங்களில் ஆகாயத்தில் கலந்திருக்கும் நீராவியைப் பயிர்களுக்கு உபயோகித்துக்கொள்ள வேண்டிய அவசியம் அனேக விடங்களில் அனேக காலங்களில் உண்டாகும். விலையுயர்ந்த பழச் செடிகளை வைத்துப் பரிபாலித்துவரும் தோட்டங்களிலும் நன்செய்களால் நெல் கோதுமை முதலிய பயிர்களைச் சாகுபடி செய்யுமிடங்களிலும் பயிருண்டான பின் நிலத்தைக் கொத்திக் கிளறி அதன்மேல் காய்ந்த இலைச்சருகு, கூழம், சண்டுமுதலியவைகளைப் பரப்பி, அதன்மேல் கூழாங் கற்களைக் கொஞ்சம் போட்டு வைத்தால், பூமியின்மேல் பரப்பு இரவில் குளிர்ச்சியடைவதற்கு முன்னாகவே கற்கள் குளிர்ந்துவிடும். அப்

போது அவைகளில் பனி அதிகமாய்ப் படிந்து நிலத்தில் இறங்கும்; இந்த ஈரம் பழச் செடிகளுக்கும் பயிர்களுக்கும் போதுமானதாயிருக்கும். இப்படிச் செய்தால் அநேக நாட்களுக்குத் தண்ணீர் பாய்ச்சாமலே அவைகளைக் காப்பாற்றி வரலாம். நமது நண்பர்கள் இம்முறையை ஆங்காங்குப் பரிக்ஷித்து அதன் பயனை நமது பத்திரிகை மூலமாய் வெளியிடுவார்களென நம்புகிறோம்.

மக்காச்சோளம்

MAIZE

பர்மா தேசத்துக் கிருஷிகர் மக்காச் சோளத்தைச் சாகுபடிசெய்து அதின் தானியத்தை ஆகாரத்துக்கு உபயோகித்து வருவதுமல்லாமல், அந்தக் கதிர்கள் தானிய மணிகளை மூடிக்கொண்டிருக்கும் காகிதம்போன்ற தோகைகளை எடுத்து அவைகளைச் சுருட்டுச் செய்ய உபயோகிக்கிறார்கள். புகையிலையையும் அதன் காம்புகளையும் நுண்மையாய் நறுக்கித் தூளாக்கி அவைகளுடன் 'ஒன்னிபின' என்னும் ஒருமரத்தின் தூளையும் கலந்து வைத்துக்கொண்டு இந்தத் தூளை மக்காசசோளக்கதிர் தோகைகளில் ஒன்று அல்லது இரண்டில் சுருட்டிக் கடைகளில் விற்கிறார்கள். பர்மா தேசத்தவர்கள் இந்தச் சுருட்டுகளை வெகு பிரியத்துடன் உபயோகித்து வருகிறார்கள். நிலத்துக்குச் சரியானபடி எருவிட்டுப் பயிரிட்டால் ஒரு ஏக்கர் நிலத்தில் 100 இராத்தல் முதல் 200 இராத்தல் வரையிலும் இந்தத்தோகை கிடைக்கிறது. 366 இராத்தல் நிறையுள்ள மக்காச்சோளக் கதிர்த் தோகைக்குச் சுமார் ரூபா 100 விலை கிடைக்கிறது. ஆகையால் ஒரு ஏக்கரில் பயிராகும் மக்காச்சோளக்கதிர்களிலுள்ள இந்தத் தோகையில் மட்டும் சுமார் 33 ரூபாய் முதல் 66 ரூபா வரையிலும் கிடைக்கக்கூடும். இந்தத்தேசத்தில் சுருட்டுகளுக்கு இந்தத் தோகை உபயோகப்படுவதாகத் தெரியவில்லை. சிவகாசி, திண்டுகல், இராஜமஹேந்திரம், காகிநாடா முதலான விடங்களிலுள்ள வியாபாரிகளில் சிலர் இதை உபயோகித்துச் சுருட்டுசெய்து விற்பார்களானால் சில வருஷங்களுக்குள்ளேயே அதன் உபயோகம் எல்லாஜனங்களும் நன்றாய் அறிந்து கொள்ள ஏதுவாயிருக்கும். கிருஷிகருக்கும் அதிகமான இலாபம் கிடைக்கும். இந்தத் தேசத்தில் அநேக வஸ்துக்களின் உபயோகம் ஜனங்களுக்குத் தெரியாமல்தான் அவைகள் வீணாக்கப்படுகின்றன. கிருஷிகர் இவ்விஷயத்தில் ஊக்கத்துடன் முயற்சி செய்வார்களென நம்புகிறோம்.

தொழு எருச் சேர்க்கும் விதம்

A METHOD OF COLLECTING FARMYARD MANURE

1. தொழுஎருச் சேர்த்திடத் தோழரே பாரீர்
வழுவிலா ஓர்முறை வகையுடன் கேளீர்.
2. இருபது நீளம் ஈரா றகலம்
சரிமூன் றடியினிற் குழியது தோண்டும்.
3. சுற்றிலு மூன்றடிச் சுவர்தனை வளர்த்து
மற்றதின் மேற்சில மரத்தூண் நிறுத்தி,
4. சட்டமுங் கூட்டிச சாரமுடன் வைத்து
விட்டமு மல்லுடன் திட்டமா யேற்றி,
5. வெயிலதும் மழைஜலம் ஒழுகிடா விதமாய்
செடலுடன் கூரையைச் செவ்வனே வேய்ந்து,

6. சண்டுடன் செத்தை சருகொடு கூளம்
கொண்டுவந் தந்தக் குழியினிற் பரப்பும்.

7. ஓர்புற மாக ஒடுக்கமாம் அழியில்
சீர்பெற வைக்கோல் சிதறு தமையும்.

8. கால்நடை களையதில் கலக்கவே நிறுத்தி
பால்பசு மேயப் பாங்குடன் விட்டு,

9. உழவு முதற்பல உறுதொழி லதனில்
கழிவா கும்பகற் காலந் தவிர,

10. எக்கா லத்திலும் இத்தொழு வதனில்
அக்கால் நடைகளை அடைத்துநீர் வையும்.

11. காலையோ மதியமோ மாலையோ ஒழிவாம்
வேலையில் மாட்டை வெளியே விட்டு,

12. நீரினிற் கழுவி நிதமத் தொழுவில்
சீருடன் செத்தை சிதறியே யடையும்.

13. சாணமுஞ் சிறுநீர் சண்டுடன் கலக்கும்
காணலு மரிதாம் கடுகவம் போகா.

14. மாதமூன் றாகும் மாண்குழி நிறைய
சேதமொன் றின்றிச் சேர்ந்திடு மெருவே.

15. பசுத்தொழு வதனில் பகல்காய் வெயிலால்
விசும்பினில் வீசும் வெம்பிய நாற்றம்,

16. குதிரையின் நீரும் கூறிய வெயிலில்
சிதறுமந் நாற்றம் சீரம் மோனியா,

17. எனுமொரு வாயு எய்துதற் கரிதாம்
அனலினுங் கனலினும் புனலினும் அழியும்.

18. பயிர்வகைக் கப்பொருள் உயிரெனப் படுமே
இயல்பினில் சிறுநீர் எருவினு முளதே.

19. ஆதலி னிவ் வாவியின் காப்பு
சாதன மாகும் சகலரு மறிவீர்.

20. இப்பொழு தோநீர் எருச்சேர்க் கும்வகை
தப்பா கும்நீர் தயைசெய் துணர்வீர்.

21. சிறுவீட் டயற்புறம் சிறுகுழி வெட்டி
நிறைந்திடச் சாணம் நிதமதிற் கொட்டி,

22. வெயிலினுங் காற்றினும் வெதும்பியே கெட்டிடும்
புயலினும் மழையினும பொங்கியே கரையும்.

23. ஊற்றெடுத் தொருபுறம் உரச்சத் தோடும்
நாற்றமும் பன்னேய் நண்ணுமே திண்ணம்.

24. இப்படிச் சேர்த்தும் எருவகை யதனில்
செப்பிய தொழுவெருச் சேர்பதின் மடங்கே.

25. சத்துள எருவாம் சாதன மெளிது
பித்தரே யாமிதில் பின்னிடை பவரே.

26. கால்நடைக் கீனம் கடுகள வில்லை
பால்பசு வுக்தும் பல்லாண் டாக.

27. ஒருஜதை எருதினில் ஓராண் டதனில்
வருமெரு நாற்பது வண்டியு மாமே.

28. எளிதினி லாகும் இம்முறை யதனைத்
தெளிவுடன் நீரும் தெரிந்துகைக் கொள்ளும்.

J. DHARMARANGA RAJU.

மாசி மாதத்திய பருவங்கள்

THE MONTH'S OPERATIONS

செங்கல்பட்டு ஜில்லா.—கேழ்வரகு, மிளகாய் நடுகை முடிவாகும். சிற்சில இடங்களில் நஞ்சைகளிலும் கிணற்று இறவைகளிலும் கார் நெல் நடுகை ஆகும்.

தேன் ஆற்காடு ஜில்லா.—சில இடங்களில் கேழ்வரகு நடுகை செய்யலாம். கரும்பு சாகுபடிக்குக் கிடங்குகள் தோண்டி ஆறவிடலாம்.

வட அற்காடு ஜில்லா.—நஞ்சையில் சில இடங்களில் நெல்லும் சில இடங்களில் கேழ்வரகும் நடலாம். மழை இல்லாததால் வேறு பருவங்கள் செய்யமுடியாது.

சேலம் ஜில்லா.—சில இடங்களில் நெல், கேழ்வரகு, சோளம் விதைக்கலாம். நெல்லும், கேழ்வரகும் நடுகை செய்யலாம்.

கோயம்புத்தூர் ஜில்லா.—நெல், கேழ்வரகு, சோளம், அனேக இடங்களில் விதைக்கக்கூடும். மழை இல்லாததால் கிணற்று இறவையிலும், தண்ணீர் உள்ள குளங்களின் ஆயக்கட்டுகள் தவிர மற்ற இடங்களில் ஒன்றும் செய்யமுடியாது.

திருச்சினாப்பள்ளி ஜில்லா.—நெல் அறுவடையாகும் காலம். வேறு பருவங்கள் ஒன்றும் செய்யமுடியாது. கரும்பு சாகுபடிக்குக் கிடங்குகள் வெட்டலாம்.

தஞ்சாவூர் ஜில்லா.—எள்ளு விதைக்கவும், கேழ்வரகும் புகை இலையும் நடவும், மக்காச்சோளம் சாகுபடி செய்யவும் இது ஏற்றகாலம். எதற்கும் மழை அவசியம்.

மதுரை ஜில்லா.—நெல் சோளம் சாகுபடிசெய்ய நிலம் உழுது பருவப்படுத்தலாம். நெல் நடுகை செய்யவும் கூடும்.

திருநெல்வேலி ஜில்லா.—கரும்பு நட கிடங்குகள் தோண்டலாம். மாசி எள்ளும் சித்திரைச் சோளமும் விதைக்க நிலம் உழுது பருவப்படுத்தலாம்.

குறிப்புகள்

NEWS AND NOTES

போர்மோசா தீவின் ஜப்பானிய விவசாய இலாகா டைரெக்டவர்கள் இவ்வருஷத்திய மாரிகாலத்தில் இந்தியாவுக்கு வந்து, இங்குள்ள கால்நடை வர்க்கங்களில் விசேஷமான கால்நடைகளைத் தெரிந்தெடுத்து விலைக்குவாங்

கிக்கொண்டுபோய் அத்தீவினிலுள்ள கால்நடைகளுடன் கலக்கச்செய்து வர்க்க விர்த்தியுண்டுபண்ண உத்தேசித்திருப்பதாய்த் தெரியவருகிறது.

கர்னூல் ஜில்லாவில் வரவர ஓமம் சாகுபடியின் விஸ்தீரணம் அதிகமாய்க் கொண்டிருப்பதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். தர்காலத்தில் ஓமம் சாகுபடியாகும் மற்ற இடங்களிலும் விசேஷ முயற்சி யெடுத்துக் கொண்டால் நலமாயிருக்கும்.

1902-ம் வருஷத்தில் சர் ஆல்பிரட்ஜோன்ஸ் என்பவர் அமெரிக்காத் தீவுகளிலிருந்து 500 குலை செவ்வாழைப்பழம் இங்கிலாந்துக்கு அனுப்பியதில், அவைகளில் 300 குலைகள் விலையாயிற்றென்றும், மற்றவைகளை வாங்குவாரில்லாம லிருந்ததென்றும் எழுதி யிருந்தார். இப்போதோ வாரத்திற்கொருமுறை 1,20,000 குலைகள் இங்கிலாந்துக்கு அனுப்புவதாயும், அங்குள்ள பழக்கடைகளில் ஒவ்வொன்றிலும் செவ்வாழைப் பழங்கள் விலையாவதாயும் தெரியவருகிறது. இப்படியிருக்க இந்துதேசத்திலிருந்து மட்டும் இங்கிலாந்துக்கு இப்பழக்குலைகள் என் அனுப்பப்படுவதில்லை யென்று கவனித்தால், இந்தத் தேசத்தில் ஊக்கமும், விடாமுயற்சியும், வியாபார சக்தியுமுள்ள கிருஷிகர் இன்னும் தோன்றி முன்னுக்கு வரவில்லையென்பது நன்ருய் வெளியாகும்.

கோயம்புத்தூர் விவசாயப்பண்ணையில் இவ்வருஷம் கஞ்சா பயிரிட்டு விசேஷ வளர்த்தியடைந்திருந்ததை நாம் கவனித்தோம். சில தினங்களுக்குமுன் அந்தச் செடிகளை வெட்டி இலைகளைக் கிள்ளி கஞ்சா செய்தார்களாம். அந்தமுறை அநேகருக்கு நூதனமானதாயிருக்கிறது.

கோயம்புத்தூரைச்சேர்ந்த பவானி, சத்தியமங்கலம், தாராபுரம், ஈரோட், கரூர், பல்லடம் தாலுக்காக்களில் புதிதாகச் சர்வேசெய்த ஆபீசராகிய ம-ா-ா-ஸ்ரீ, ஜே. லன்காஸ்டர் துரையவர்கள் அனுப்பிய ரிப்போர்ட்டின் பேரில் கருணைபொருந்திய சென்னை கவர்ன்மெண்டாரவர்கள் பின்வருமாறு எழுதியிருக்கிருர்கள்.

1878-80-ம் வருஷத்தில் செய்த செட்டில்மெண்டிற் கப்புறம் ஆகார தானிய விலைகள் அதிகமாய் உயர்ந்திருப்பதாகவும், கரும்பு, புகையிலை முதலிய வியாபாரத்திற்குரிய பயிர்கள் விசேஷமாய்ப் பயிர் செய்யப்பட்டிருப்பதாகவும், நிலத்தின் கிரயமும் உயர்ந்திருப்பதாகவும், வருஷாந்திர தீர்வை சுளுவாய் வசூல் செய்யப்படுகிறதென்றும், ஜனத்தொகையிலும் 100-க்கு 26-பேர் அதிகப்பட்டிருக்கிருர்களென்றும், ஆனல் இப்படி ஜனங்கள் அதிகரித்தும் அவர்களுக்குரிய சுகங்கள் ஒன்றும் குறையவில்லை யென்றும், 500 மைல் விஸ்தீரணத்திற்கு ரோட்போட்டதாலும், ரெயில்வே விஸ்தீரணத்தாலும் வியாபாரம் அதி சுலபமாய் நடந்தேறி வருகிறதென்றும், ஆகையால் தீர்வையை இன்னும் உயாத்தலாமென்று அந்த ஜில்லா கலெக்டர் துரையவர்களும், ரெவினியூ போர்டாரும் அபிப்பிராயப்படுவது சரியென்றும் கருணைபொருந்திய கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொள்ளுகிருர்களாம்."

விவசாய டிபார்ட்மெண்டாரால் பிரசுரம் செய்த பஞ்சாங்கம் முதலில் 2-அணுவுக்கு விற்றுவந்தார்கள். இப்போது அதை 1-அணுவுக்கு விற்கும்படி உத்தரவு செய்திருக்கிருர்கள்.

நாங்கள் சொல்லுவதைமட்டும் நம்பவேண்டாம்

தயவுசெய்து இக்கடிதத்தை வாசித்துப்பாருங்கள்

ஸ்ரீலக்ஷ்மிவிலாஸ்
நாகை 4—1—10.

மா-ா-ா-ஸ்ரீ, J. R. ரங்கராஜு அவர்களுக்கு,

ஐயா,

முந்தாநாள் இராத்திரி வழக்கம்போல் என் புத்திரியைச் சாப்பாடு வைக்கும்படி சொன்னேன். சுமார் பத்து நிமிஷம் வரையில் நான் காத்திருந்தும் இலை போடாததால் சற்றுக் கோபத்துடன் எழுந்துபோய் என்ன செய்கிறுளென்று பார்த்தேன். படித்துக்கொண்டிருந்தாள். "என்னடி! சாப்பாடு வைக்கச்சொல்லிப் பத்து நிமிஷங்களுக்குமேலாகியும் இன்னும் படித்துக்கொண்டிருக்கிறுயே" என்றேன். "அண்ணு தயவுசெய்து சற்றுப்பொறுங்கள். இதோ வந்துவிட்டேன். கொஞ்சந்தான் பாக்கியிருக்கிறது" என்று சொல்லிவிட்டு அப்பாலும் படித்துக்கொண்டேயிருந்தாள். ஒருநாளும் இப்படியவள் செய்ததில்லையாகையால் என்ன படிக்கிறுளென்று சமீபத்தில் போய்ப்பார்த்தேன். சந்திரகாந்தாவென்று போட்டிருக்கவே "என்னடி அவ்வளவு அபூர்வம்; தமிழ்க்கதைகளெல்லாம் பாட்டிகதைகள்தானே, அதில் இவ்வளவு உற்சாகமேது" என்றேன். அதற்கு அவள் "அண்ணு தாங்கள் சொல்வது மொத்தத்தில் வாஸ்தவந்தான். ஆனுல் இராஜாம்பாள், சந்திரகாந்தா என்னும் இரண்டு நாவல்கள் மாத்திரம் அப்படியல்ல. இவைகளைப் படிக்க ஆரம்பித்துவிட்டால் முடிக்கும் வரையில் கீழே வைக்க மனம் வரவில்லை. அவ்வளவு சாமர்த்தியமாய் எழுதப்பட்டிருக்கின்றன. அநேக தமிழ் நாவல்களைப் படிக்க ஆரம்பித்தால் தூக்கந்தான் வரும். ஆனுல் இவைகள் அப்படியல்ல" வென்றுள். அவள் சொன்னது உண்மையா என்று பார்ப்பதற்காகப் புஸ்தகத்தை வாங்கி இங்குமங்கும் புரட்டிப் பார்த்தேன்.

நல்ல காகிதத்தில் பிழையற அச்சிட்டிருப்பதையும் இதுவரையில் தமிழ் நாவல்களில் இல்லாதமாதிரியாய் வளவளப்பான கடிதத்தில் மூன்று சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதையும் பார்த்த உடனே தமிழ் நாவல்களைக் கையில்கூட தொட விரும்பாத எனக்கு அதைப் படிக்கவேண்டுமென்னும் விருப்பம் உண்டாயிற்று. அன்று இராத்திரி "இராஜாம்பாள்" என்னும் நாவலைப் பூராவாய்ப் படித்துவிட்டுதான் படுத்துக்கொண்டேன். நேற்று சந்திரகாந்தா என்னும் நாவலையும் பூராவாய்ப் படித்தேன். இப்புஸ்தகங்களிரண்டையும் வாசித்தவர்கள் அவைகளைப் புகழ்ந்து தங்களுக்கு அநேக கடிதங்கள் எழுதியிருப்பார்கள். ஆனுலும் எனக்குத் தோன்றுவதை நான் சொல்லுகிறேன். அதிக கேவலமாகிய காகிதத்

தில் 100-அல்லது 120-பக்கங்கள் போட்டு 12-அணு விலை வைத்துப் பணம் சம்பாதிக்கிறவர்களைப் போலல்லாமல் தாங்கள் நல்ல காகிதத்தில் சுமார் 200-பக்கங்கள் வரையில் போட்டு மூன்று சித்திரப்படங்களும் சேர்த்து 12-அணுவுக்கு விற்பது வியக்கத்தக்கதே. "இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" என்னும் இவ்விரண்டு புஸ்தகங்களையும் தமிழறியும் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். இனி தாங்கள் வேறு புஸ்தகங்கள் பிரசுரித்தால் தயவுசெய்து முதலில் எனக்கு வி. பி. மூலமாய் இரண்டு புஸ்தகங்கள் அனுப்பக்கோருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்) கோபாலகிருஷ்ணன்.

கேட்ட உடன் சந்தோஷத்தையும்,
பார்த்த உடன் ஆனந்தத்தையும்,
வாசித்த உடன் மனோ உற்சாகத்தையும்,
முடித்த உடன் வியப்பையும்
கொடுக்கும் நாவல்கள் எவை?

"இராஜாம்பாள்"
"சந்திர காந்தா"

என்னும் துப்பு அறியும்
நாவல்கள் தான்.

ஒவ்வொன்றும் கண்டோர் மனதைக் கவரும்
மூன்று சித்திரப்படங்களுடன் கூடியது.

ஒவ்வொன்றின் விலை அணு 12.

தபால் கூலி வி. பி. கமிஷன் அணு 3 பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் நவறுமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெருவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்குப் பத்திரிகை சேராத விஷயம் தெரிவித்தால் அந்தந்தத் தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையுமனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தயவுசெய்து விலாசத்தின்மேல் எழுதியிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். அச்சடித்திருக்கும் Register No. M. 801 என்பதை எழுதிவிடக்கூடாது என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

"கிருஷிகன்" சித்திரை, ஆடி, ஐப்பசி மாதங்களின் சஞ்சிகைகள் செலவாகிவிட்டதால் இனிமேல் இவ்வருஷத்தில் சேரும் சந்தாதாரர்களுக்கு இம் மூன்றுபிரதிகளும்கொடுக்கமுடியாது. எழுதிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்கவேண்டுமானல் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்புகளாவது அனுப்பவேண்டும்.

மானேஜர்.

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரயமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைகளைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்	ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	0	12	0
வி. பி. கமிஷன் அணு 1-பிரத்தியேகம்.			
தனிப்பிரதி	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்குத் தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்டு பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்ந்த நான்கு தங்கப் பதக்கங்களும் முதல்தரமான
அனேக யோக்கிதாபத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன.

ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி,

பண்டித டி. கோபாலாசார்யர், எ.வி.எஸ்.

அவர்களால் சாஸ்திர முறைப்படி நேரில் தயார் செய்யப்பட்ட
ஆயுர்வேத அவுஷதங்கள்.

1. கேசப்பிரசாதனதைலம்.--கூந்தலை விருத்தி செய்யத்தக்கது. நல்ல சுவாஸனையுள்ள தைலம். கண்களுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கக்கூடியது. ஒருபுட்டியின் விலை ரூ. 1—0—0.

2. அசோகவடி.— ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை செம்மையா யுண்டாகாதிருத்தலையும், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிக வெள்ளமாய்ப் போதலையும், வயிற்றுவலி, காலெரிவு முதலிய ஸ்திரீகளின் வியாதிகளைக் கண்டிப்பதில் அமிருத சஞ்சீவினிபோன்றது. புட்டி 1-க்கு விலை அணா. 12.

3. பிரமேக பஞ்ஜனி எனும் மதுமேக மூத்ரசங்காரி.—மதுமேகமென்னும் மூத்திரத்தையும், நெடுங்காலந் தொடங்கி மூத்திரமார்க்கத்திலிருந்து சரவிக்கும் சுக்ல நஷ்டம் முதலிய காரகங்களை நிவர்த்தி செய்யும். (புட்டி 1-க்கு விலை ரூபா. 2—8—0.)

4. ச்யவனப்பிராஸன.—உப்பஸம், க்ஷயம், சாதாரணமான இருமல், தொண்டை, ஸ்வாஸக்குழாய்களின் ஸம்பந்தமான எல்லாவிதமான துர்க்குணங்களுக்கும் அபூர்வமானது. காட்லீவர் எண்ணெயினால் குணமாகாத வியாதிகளெல்லாவற்றையும் சௌக்கியப்படுத்தும். (டின் 1-க்கு விலை ரூபா 2—8—0.)

5. ரக்தசோதக.—கெட்ட இரத்தத்தைச் சுத்திசெய்யும், உடம்பிலிருக்கும் சொறி, சிரங்கு, மஞ்சகாமாலை, வாதத்திலுண்டாகும் வலி இவைகளை நிவர்த்திசெய்யும். (புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0.)

போஸ்டேஜ் பாகிங் முதலிய செலவு பிரத்தியேகம்.

N. B.—இன்னும் இதரபேடெண்டு சாஸ்த்ரீக மருந்துகளும் அவைகளின் காட்லாக்குகளும் கடிதமெழுதுவோர்க்கு இனாமாயனுப்பப்படும்.

டெலிக்ராம் அட்ரஸ் "பண்டிட் மதிராஸ்."

☞ **ஆயுர்வேதாச்சிரமம்,**

55, ஆசாரப்பன் தெரு,

ஜார்ஜ் டவுன், சென்னை.

P. SUBBA ROY'S
Wonderful Auyurvedic Medicines.
பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை,
தென்னுற்காடு ஜில்லா.

தயவுசெய்து தங்கள் சினேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்
பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

39. "விஷ்ணுதிலா."—எப்பேர்க்கொத்த தலைவலிக்கும் நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் இம்மருந்து கொஞ்சம் தடவி நன்றாகத் தேய்க்க வேண்டும். இடுப்புநோய், கழுத்துநோய், பக்கசூலை, கைகால் பிடிப்பு முதலியவும் இன்னும் தேகத்தில் காணும் மற்றுமுள்ள சகல வலிகளுக்கும் இம்மருந்தில் கொஞ்சமெடுத்து நோயுள்ளவிடத்தில் நன்றாகத்தேய்க்கச் சுகமாகும். தேள், நட்டுவாக்களி, பூரான் இதுகள் கொட்டின அல்லது கடித்தவிடத்தில் இம்மருந்தைத் தடவி நன்றாய்த் தேய்த்தால் சௌக்கியமாகும். சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

40. "சுகுமாரதிலா":—இதைப் பிரதிதினமும் ஆண்குறியின்மேல் பூசிவந்தால் லிங்கத்தின் சோர்வு, ஆண்குறி துவளல், கோணல், நரம்புகளின் தளர்ச்சி நீங்கி, நீண்டு கெட்டிப்பட்டு, மிகுந்த வலிவுகொள்ளும். இழந்துபோன போகசக்தி முற்றிலும் பெற்றுச் சுகிக்கலாம். விலை சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அணா 5-பிரத்தியேகம்.

உயர்ந்த கோரோஜனை தோலா 1-க்கு ரூபா 6. உயர்ந்த பச்சை கற்பூரம் தோலா 1-க்கு ரூபா 2. உயர்ந்த குங்குமப்பூ தோலா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவுகள் பிரத்தியேகம்.

அதி உன்னத வாசனை திரவியங்கள் முதலானவைகளின் விலைவிபர ஜாபிதா.

"உசிதமான அத்தர் தினுசுகள்":—ரோஜாப்பூ, மல்லிகைப்பூ, ஜாதிப்பூ, மகிழம்பூ, விளாமிச்சம் வேர், மரிக்கொழுந்து, தாழம்பூ, மருதாணிப்பூ, சுவாக் முதலிய புஷ்பங்களின் முதல்தரமான அத்தர் வகைக்குத் தோலா 1-க்கு கிரயம் ரூபா 1-8-0. வி. பி. செலவு பிரத்தியேகம்.

"பன்னீர்":—இப்பன்னீர் ½ அவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது. இச்சிறு சீசாவிலுள்ள பன்னீரை 3 பெரிய சீசா குளிர்ந்த ஜலத்தோடு கலந்தால் முதல்தரமான 3 சீசா பன்னீராகும். மேன்மையான பன்னீர் விலை சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

"உரைந்த வாசனைபில்லைகள்":—உரைந்தகுலாப், உரைந்த மோதியா, உரைந்த லவண்டர்களாகிய 3 தினுசுகள். உடுப்புகளுக்குப் போடக்கூடிய உசிதமான வாசனை. தினுசுக்கு டப்பா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

"உடுப்புகளுக்குப்போடும் சுவாசனைத்திரவியங்கள்":—மனமோகினி, மனோரஞ்சன், ஜெகமோஹினி, மதனவிலாசம், அக்பர்சிரூய், ஷாஜிஹான் சிரூய் என ஆறுவகையான வாசனைகளிருக்கின்றன. இவைகளில் ஒவ்வொன்றும் இப்பொழுதே மலர்ந்த புஷ்பங்களின் சுவாசனை யுடையவைகள் வகை 1-க்கு சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

"லெமனெட் பவுடர்":—இச்சூர்ணத்தில் கொஞ்சம் எடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்தால் அதி உத்தமமான லெமனெட் தயாராகிவிடும். ஒரு சீசாவிலுள்ள சூர்ணம் சுமார் 8 பெரிய சீசா லெமனெட் செய்யப்போது

மானது. விலை சீசா 1-க்கு அணா 6. வி. பி. செலவு 1 முதல் 4 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

"சோடாவாட்டர் பவுடர்":—இச்சூர்ணத்தில் கொஞ்சமெடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்துகொண்டால் அதி உசிதமான சுயமான சோடாவாடர் உண்டாகும். ஒரு சீசாவிலுள்ள பவுடர் சுமார் 8 சீசா சோடாவாடர் செய்யப் போதுமானது. விலை சீசா 1-க்கு அணா 6. வி. பி. செலவு 1-முதல் 4 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

"தாம்பூல விஹாரம்":—தாம்பூலம் தரிப்பவர்களுக்கு அதி அவசியமான மனக்களிப்புண்டாகக் கூடியவாசனைக் கலவை. விலை டப்பா I-க்கு அணா 4. வி.பி. செலவு 1 முதல் 12 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

"கேசர் பவுடர்":—இது ஓர்விதமான விலைபெற்ற சுகந்த கலவை. இதில் கொஞ்சமெடுத்து தண்ணீரிற் கலந்தாவது அல்லது கொஞ்சம் சந்தனத்திற் கலந்தாவது தேகத்திற் பூசினல் எல்லாராலும் புகழத்தக்க பரிமளத்தைத் தரும். கலியாணம் முதலிய சுபகாரியங்களுக்கு இதை அவசியமாக உபயோகிக்கவேண்டியது. இதன் இன்பமான சுகந்தம் அனுபோகித்தவர்களுக்குத்தான் தெரியும். சந்தனத்துடன் மனோரம்மியமான இச்சிரேஷ்டமான கலவையைச் சேர்த்துக்கொண்டால் சந்தனத்தில் அத்தர், பன்னீர், குங்குமப்பூ முதலிய வாசனைகள் சேர்க்கவேண்டியதனவசியம். சீசா 1-க்கு விலை அணா 8. ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

"அரகஜா":—இது மற்றொரு விதமான திவ்வியமான சுகந்த கலவை. இதைத் தனியாகவாவது சந்தனத்துடனாவது உபயோகிக்கலாம். தேகத்தில் பூசிக்கொள்ளலாம். உடுப்புகளுக்குப் போடலாம். அதி உன்னதமான சுவாசனை. இதன் திவ்யமானபரிமளத்தைச் சுகித்தறிந்தவர்களால் மிகவும் புகழப்படுகிறது. ஒரு தடவை பூசினபிறகு பிரதிதினமும் ஸ்நானம் செய்தாலும் 3-நாள் பரியந்தம் இதன் இன்பமான பரிமளம் தேகத்திற் தங்கி நிற்கும். விலை டப்பா 1-க்கு அணா 8. ஒன்று முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

"அம்பர்":—இந்தச் சுகந்தத்தில் கொஞ்சமெடுத்து உடுப்புகளுக்குப் போடலாம். தேகத்திற் பூசலாம். முகத்திற் தடவிவந்தால் பருக்கள், கருப்பு புள்ளிகள், மேகப்படர், மாசு, அரிப்பு முதலியதுகள் நீங்கி முகத்திற்கு வசீகரத்தைத் தரும். வெற்றிலையில் தடவி தாம்பூலத்துடன் உபயோகித்தால் மிக்க மனோ உற்சாகத்தைத் தரும். கொஞ்சமெடுத்து வெந்நீரில் கலந்து ஸ்நானம் செய்தால் வென்னீரெல்லாம் சுகந்த பன்னீர் வாசனையுள்ளதாகும். மனக்களிப்பையுண்டாக்கித் தேஹசிரமத்தையாற்றும். விலை டப்பா ஒன்று அணா 8. ஒன்று முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

"இந்தியன் பெட்டல் டஸ்டு":—அதி மனரம்மியமான சுகந்த கலவை பொட்டலம். உடுப்பு பெட்டிகளில் வைத்திருந்தால் உடைகளுக்கு மிகவும் உன்னதமான சுவாசனை எற்றுவது மன்னியில், வண்டு முதலிய பூச்சி துணிகளில் அணுகாமல் கார்க்கும். இதன் இன்பமான சுகந்தம் நெடுநாள் நிற்கும். பொட்டலம் 1-க்கு விலை அணா 4. ஒன்று முதல் 12 பொட்டலங்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

(குறிப்பு) இந்த இடங்களில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவுசெய்து தமிழிலாவது, இங்கிலீஷிலாவது அடியிற் குறித்த விலாசத்துக்கு விவரமாக எழுதிப் பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

இரங்கோன்

இரஞ்சித போதினி

எப்பொழுதும் சித்திரப்படங்களோடு பிரகாசிப்பதுடன் அறிவைப் பரவச்செய்து ஆனந்தத்தை விளைவித்து யாவர்க்கும் சுகசெல்வ நன்மைகளையும், சுகிர்தபாக்கிய பொக்கிஷத்தையும், நீடூழி பெருகுவிக்கும் ஓர் நவீன மாதாந்தப் பத்திரிகை. இதிலடங்கிய விஷயங்களாவன:—

சுதேச சுகாதார சங்கத்தின் மெம்பர்கள் எழுதும் வியாசங்கள், மனோவசிய சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், அமெரிக்க சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்த நூதன விஷயங்கள், வைத்தியக்குறிப்பு, பாலர் பரிபாலனம், ஸ்திரீகளுக்குரிய விஷயங்கள், விநோத விசித்திர விஷயவிளக்கம், அதிரசமஞ்சரி, ஹிதோபதேசம், பழமொழி, விடுகதை வினாக்கள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தமானங்கள், ஜீவாதார மந்திரோபதேசம் முதலிய அரிய பெரிய பல விஷயங்கள்.

இதன் வருஷசந்தா ரூபா 2; தேவையானவர்களுக்கு மாதிரிப்பிரதி அனுப்பப்படும்.

மானிட மர்மசாஸ்திரம்

ரூபாய் 300 இனாம்

விவரம் பின் துறிப்பிட்டிநக்தும் ஒவ்வோந புஸ்தகத்திலும் கண்டுகொள்ளலாம்.

		அணா
1.	மானிட ஜீவியத்தின் பலபருவங்கள் (ஓர் உபந்நியாசம்) 23 படங்களுடன்	6
2.	இல்லற இன்ப இரகசியம் (29 படங்கள்)	12
3.	ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும் (46படங்கள்)	12
4.	மாதாவின் மாக்ஷிமை (18 படங்கள்)	6
5.	சிசுவுற்பத்தி (34 படங்கள்)	6
6.	கர்ப்பக்கால சுகாதாரவிதிகள் (8 படங்கள்)	4
7.	கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்	6
8.	மருத்துவசாஸ்திரம் (8 படங்கள்)	8
9.	சிசு பரிபாலனம் (15 படங்கள்)	4
10.	ஆண், பெண், மலட்டிற்கு நிவாரணம் (5 படங்கள்) ...	8
11.	ஆண்மையின்அழிவும் அதன்மீட்சியும் வாலிபருக்கு (6 படங்கள்)	8
12.	சமயோசித சஞ்சீவி	2

தபாற் செலவு ஒரு அணா

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரே தடவையில் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்குத் தபாற்செலவு உள்பட ரூபா 5-க்கு அனுப்பப்படும்.

12. புஸ்தகங்களையும் ஒன்றாகச்சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்து தங்க எழுத்துக்கள் பதித்த பிரதி ஒன்றுக்குத் தபாற் செலவு உட்பட ரூபா 5-8-0.

மானேஜர்,

"இரஞ்சித போதினி ஆபீஸ்"

11, 12 கமிஷனர் ரோட்,

இரங்கோன்

'தென்னிந்திய விவசாயம்'

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது.

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

	ரூ.	அ.	ப.
விவசாய விளக்கம்	1	4	0
தென்னை	1	0	0
கரும்பு	1	0	0
நெல்	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,

தென்னிந்திய விவசாயம்,

வண்ணாரப்பேட்டை, சென்னை.

The South Indian Mills Co., Ltd.
TINNEVELLY.

தென் இந்திய மில்ஸ் கம்பேனி (லிமிடெட்)

திருநெல்வேலி.

மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெறுமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெய் ஆகஸ்ட்டுமீ முதல் ஷை கம்பெனியில் கிடைக்கும்.

THE COMPLETE LETTER WRITER

2nd Edition Revised and Enlarged

BY

Hari Charan Das

Price Re. 1. *(full cloth Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

It contains Chapters on :—1. Notes and general Information, 2. Private Correspondence, 3. Receipt forms, 4. Bill forms, 5. Municipal Office, 6. Post Office department, 7. Postal department, 8. Income tax Office, 9. Railway Office, 10. Police Office Correspondence, 11. Enquiring about a missing article on the Tram-car, 12. Medical department, 13. Collector's Office Correspondence, 14. Correspondence with Attorneys, Vakils, Muktears etc., 15. Correspondence with Doctors, 16. Steamer Correspondence, 17. News paper Correspondence, 18. Commercial and Govt. Office Correspondence, 19. Miscellaneous Applications and forms, 20. Abbreviations and Daily Wages.

A copy of this book will dispense with the necessity of seeking the help of others for writing Letters, Applications, etc.

To be had of—**M. L. DAS CO.,**

122, *Baitakkhana Road, Calcutta.*

மிகவும் சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

இவை யாவராலும் புகழப்பெற்றது. அனேகம் பாடசாலைகளிலும் பாடப்புத்தகமாக உபயோகப்பட்டு வருகின்றன. மிகவும் சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ. அ.
ஸ்ரீ ராமாயண வினவிடை, 2-ம் பதிப்பு.—இதில் அநேக நூதனமான விஷயங்கள் ஒழுங்குப்படுத்திச சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனந்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம் இவைகளிலிருந்து எடுத்தெழுதிய சுருக்கமும் ராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியது. 226-பக்கங்கள் கொண்டது. ஸ்ரீ ராம பட்டாபிஷேக படத்துடன்	0 12
ஸ்ரீ மஹாபாரத வினவிடை, முதல்பாகம்.—இதில் ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்களடங்கியது. புதுப்பதிப்பு. இப்பதிப்பில் சிற்சில சீர்திருத்தங்களும் ஒழுங்குகளும் புதிதாகச் செய்யப்பட்டிருக்கிறது. பீடிகையில் சிற்சில பாகங்கள் புதிதாக ஸம்ஸ்கிருத பாரதத்திற்கு எற்ப மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் பர்வ ஆரம்பத்திலும் அவ்வவ்விடத்தில் வில்லிபுத்தூரார் எழுதியுள்ள காப்பு செய்யுளை அமைக்கப்பட்டிருக்கிறது. முடிவில் எழுதியுள்ள அனுபந்தத்தில் தமிழ்ப்பாரதத்திலுள்ள புதிய கதைகளைச் சுருக்கமாக எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.	0 12
ஆரியமத உபாக்கியானம், 3-ம் பதிப்பு.—உயர்ந்த தர்மங்களைத் தெளிவாய் எடுத்துக்காட்டும் 50-இனியகதைகள் கொண்டது. ஒவ்வோர் கதையும் நமது புராணங்களிலிருந்தே எடுத்து எழுதியது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதியை நன்கு விளக்குகிறது.	0 2
ஸ்ரீ மஹாபாரத வினவிடை, 2-ம் பாகம். இதில் பீஷ்ம, துரோண, கர்ண, சல்விய ஸௌப்திக, ஸ்திரீ பர்வங்களடங்கியது. மிகவும் இனிய நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசம் செய்யும் பாகம் மிகவும் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய புத்தகம் ஒவ்வோர் ஹிந்துக்கள் வீட்டிலும் அவசியமிருக்க வேண்டியது ...	0 12

குறிப்பு.—மேற்குறித்த புத்தகங்களைத் தவிர, இன்னும் எங்களிடம் அநேக விதமான தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்கும். கிரய ஜாப்தா வேண்டுவோர் ½-அணு ஸ்டாம்பு அனுப்பினல் உடனே அனுப்பப்படும்.

1910-ம் வருஷத்திய
ஜோதிர்விலாச பாக்கேட் பஞ்சாங்க டைரி

இந்த டைரியானது சென்ற 3-வருஷகாலமாய்ப் பிரசுரம் செய்யப்பட்டுவருகிறது. இதில் யாவருக்கும் உபயோகமான அநேக அரிய விஷயங்கள் அச்சிட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. கல்விமான்கள் யாவராலும் நன்கு மதிக்கப்பெற்றது. வேண்டுவோர் உடனே ஆர்டர் செய்யவும்.

ஸாதா பைண்டு	0 4 0
பிளாப், பென்ஸிலுடன்	0 6 0

மேற்கண்ட புததகங்கள், ஜோதிர்விலாச பாக்கட் டைரி இவை வேண்டுவோர், கீழ்க்குறித்த விலாஸத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி,

மைலாப்பூர், மதராஸ்.

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பெயர்பெற்று யாவராலும்
அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி,

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு
கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 42. A. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளதுமான ஸ்கார்ந்தமல்லாத **(Non Magnetic)** சர்தார் **(Sirdar)** லீவர் ரூபாய் 12, வெள்ளி 18.
Oxydised ரூ. 14.



நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத **(Non Magnetic)** **(Lever)** லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

நெ.	101.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிஷ்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு	3	0	0
,,	1.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளதுமான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்டயம் ஸ்டாம்பு	5	0	0
,,	104.	வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள்சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளதுமான ஹண்டிங் கெடியாரம்	12	8	0
,,	10.	வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும், 15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம்	16	0	0
,,	108	வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல் சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் ½-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது	20	0	0

N. B.—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய கம்பெனியாரால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன்னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக்கம்பெனியில் கிடைக்கும். கேட்லாக் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒரு வெல்வெட் பெட்டி ஒரு கண்ணாடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், காரண்டி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed by G. C. Loganadham Bros. at the Guardian Press, Mount Road, Madras.